# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2116/58 - 2019 මාර්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.28

*2116/58 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 9/3/5/19.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2013/VE/32.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், யட்டவத்த பிரதேச செயலாளர் பிரிவில், அஸ்கிரி பள்ளேசிய பற்று சிறு பிரிவில், மாளிகாதென்ன கிராம அலுவலர் பிரிவில், யட்டவத்த வத்த கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மா 1712 ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட 1.0136 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு:

1. **துண்டு இல. 01 - காணியின் பெயர் : யட்டவத்த வத்த; விபரம்: கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் தற்போது குடியிருப்பவர்களுக்கு வழங்குவதற்காக; உரிமை கோருவோர்: உடுபுஸ்ஸெல்லாவ பெருந்தோட்டக் கம்பனி, யட்டவத்த வத்த, யட்டவத்த; விஸ்தீரணம்: 1.0136 ஹெக்டயார்**

எல்லைகள் :

வடக்கு : ஆ. வ. மா. 105 இல் துண்டு இல. 122 மற்றும் 123; கிழக்கு : ஆ. வ. மா. 105 இல் துண்டு இல. 59, 123, 120 மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); தெற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் ஆ. வ. மா. 105 இல் துண்டு இல. 120; மேற்கு : ஆ. வ. மா. 105 இல் துண்டு இல. 120.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி மு. ப 10.30 மணிக்கு யட்டவத்த பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஆர். கே. ஹேரன்நாயக,
பிரதேச செயலாளர்,
யட்டவத்த.

பிரதேச செயலகம்,
யட்டவத்த,
2019, மாச்சு 25.

4 - 400

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.